இந்திய அரசமைப்புச் சட்டம் சமூகத்துக்கான சாசனம்

பேராசிரியர் க. பழனித்துரை

பேராசிரியர் க. பழனித்துரை எழுதிய இந்திய அரசமைப்பு சாசன முகப்புரை ஓர் எளிய அறிமுகம் என்ற நூலின் தமிழ், ஆங்கிலப் பதிப்புகளை வெளியிட்ட நில மீட்புப் போராளி கிருஷ்ணம்மாள் ஜெகநாதன்.

திண்டுக்கல், ஜூலை 19: இந்திய அரசமைப்புச் சட்டம் சமூகத்துக்கான சாசனம் என பேராசிரியர் க. பழனித்துரை புகழாரம் சூட்டினார்.

திண்டுக்கல்லை அடுத்த காந்தி கிராம கிராமியப் பல்கலை. வளாகத்திலுள்ள ஊழியரகத்தில் பேராசிரியர் க. பழனித்துரை எழுதிய 'இந்திய அரசமைப்பு சாசன முகப்புரை ஓர் எளிய அறிமுகம்' என்ற நூல் வெளியீட்டு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. தமிழ், ஆங்கிலம் என இரு மொழிப் பதிப்புகளையும் நில மீட்புப் போராளியும், பத்மபூஷன் விருதாளருமான கிருஷ்ணம்மாள் ஜெகநாதன் வெளியிட்டார். இதைத் தொடர்ந்து நூல் ஆசிரியரான க. பழனித்துரை பேசியதாவது:

நாட்டின் விடுதலைக்காகப் போராடியவர் என்ற மனநிலைதான் மகாத்மா காந்தி மீது பெரும்பாலான மக்களுக்கு உள்ளது. ஆனால், இந்த பிரபஞ்சத்தில் மானுட விடுதலைக்காக உருவான மாமனிதர் காந்தி என்ற புரிதல் நமக்கு ஏற்பட வேண்டும்.

இன்றைய சந்தை யுகத்தில், மனித சமுதாயம் தனிமைப்பட்டிருப்பதோடு அடிமைப்படுத்தப்பட்டும் உள்ளது. காந்திய சிந்தனையோடு பயணிக்கும் நாம், சமூக கனவை நடைமுறைப்படுத்தும் கருவியாக இருக்க வேண்டும். நாட்டின் விடுதலையைவிட, கிராமத்தின் விடுதலை அவசியம். தற்சார்பு நிறைந்த, குட்டி குடியரசுகளாக கிராமங்கள் மாற வேண்டும். இந்திய அரசமைப்புச் சட்டம் என்பது சமூகத்துக்கான சாசனமாக உள்ளது. இந்த சாசனம், அரசியல் கட்சிகள், அரசுகள், அதிகாரிகள் மட்டுமன்றி, நம்மை நோக்கியும் கேள்விகளை எழுப்பும்.

இந்த சமுதாயத்தில் நல்ல மனிதர்கள் இருக்கின்றனர். ஆனால், தனியாக இருந்து செயல்படாமல் இருக்கின்றனர் என்பதே வேதனையாக உள்ளது. இந்த நல்ல மனிதர்கள் சமூகத்துடன் கைகோர்க்க வேண்டும்.

பல காந்திய நிறுவனங்கள் சிக்கல்களை எதிர்கொண்டு வரும் சூழலில், காந்திய தத்துவத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்ட காந்தி கிராம கிராமியப் பல்கலை. மட்டும் இன்று வரை இளைஞர்களை ஈர்த்து வருகிறது. நாட்டுக்கு விடுதலை கிடைத்துவிட்டதாக எண்ணுகிறோம். ஆனால், கடைக்கோடி மனிதர்கள் பலருக்கு தற்போதுவரை விடுதலை கிடைக்கவில்லை.

இன்றைய சூழலில் மனிதர்களுக்கு தேவை அன்பு. அந்த அன்புக்கு மட்டுமே நம்மை மனிதனாக மாற்றும் ஆற்றல் உள்ளது. மனிதனாக வாழ்வதே இன்றைய தேவையாகவும் இருக்கிறது என்றார் அவர்.

இந்த நிகழ்வில் எழுத்தாளர் ஸ்ரீநிவாச ராமானுஜம், பேராசிரியை பத்மினி, தொழிலதிபர்கள் தங்கவேல் (அக்னி ஸ்டீல்ஸ்), விநாயகம் (சென்னை சில்க்ஸ்), மதுரை காந்தி அருங்காட்சியக தேவதாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அரசுப் பள்ளிகளை மூடுவது என்ற பேச்சுக்கே இடமில்லை

அமைச்சர் ராஜ்மோகன்

சிவகங்கை மாவட்டம், கீழடியில் உள்ள திறந்தவெளி அருங்காட்சியகத்தை ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்ட அமைச்சர் ராஜ்மோகன்.

சிவகங்கை/மதுரை, ஜூலை 19: அரசுப் பள்ளிகளை மூடுவது என்ற பேச்சுக்கே இடமில்லை என பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் கூறினார்.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே உள்ள கீழடி திறந்த வெளி அருங்காட்சியகத்தை ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்த அவர், பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கீழடி அகழாய்வுப் பணிகள் தவெக ஆட்சியிலும் தொய்வின்றி தொடரும். கடந்த ஆட்சியில் ஒதுக்கப்பட்ட நிதியைக்காட்டிலும் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும். கடந்த 2023-ஆம் ஆண்டு தொல்லியல் ஆய்வாளர் ராமகிருஷ்ணன் மத்திய அரசிடம் தாக்கல் செய்த ஆய்வு அறிக்கை இதுவரை வெளியிடப்படவில்லை. மத்திய அரசு சில விளக்கங்களைக் கேட்டு அறிக்கையைத் திருப்பி அனுப்பியதால், கடந்த மூன்று ஆண்டுகளாக இது நிலுவையில் உள்ளது. இந்த விவகாரத்தில் நமது சட்டப்பூர்வ, அறிவுப்பூர்வமான போராட்டம் தொடரும். எத்தனை ஆண்டுகள் ஆனாலும் சரி, நாம் விடாப்பிடியாக அந்த அறிவியல் சான்றுகளைச் சமர்ப்பித்து, இந்திய தொல்லியல் துறையுடன் முறைப்படி பேசி, கீழடியின் பெருமையை உலகறியச் செய்வோம்.

அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை விகிதம் குறைவாக இருந்தால், உடனடியாக சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகளை மாணவர்களின் வீடுகளுக்கு அனுப்பி அவர்களது பெற்றோர்களிடம் பேசி மீண்டும் பள்ளியில் சேர்க்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதனால், அரசுப் பள்ளிகளை மூடுவது என்ற பேச்சுக்கே இடமில்லை. அண்மையில் கூட மதுரையில் அரசுப் பள்ளி ஒன்றில் படித்த 17 மாணவர்கள் ஐஐடி, விஐடி போன்ற நாட்டின் முன்னணி கல்வி நிறுவனங்களில் உயர் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றனர். எனவே, எந்தக் காரணத்தைக் கொண்டும் அரசுப் பள்ளிகளை மூடுவதற்கு இந்த அரசு அனுமதிக்காது. மாறாக, உள்கட்டமைப்பை மேம்படுத்தி, பத்து மாணவர்கள் சேர்ந்தாலும் அந்தப் பள்ளியைத் தொடர்ந்து நடத்துவோம் என்றார் அவர்.

ஆய்வின் போது சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் வீ.ப. ஜெயசீலன், தொல்லியல் துறை முதன்மை அலுவலர்கள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தொல்லியல் சின்னங்களைப் பாதுகாக்க நடவடிக்கை: மதுரை மாவட்டம், மாங்குளம் கிராமத்தில் உள்ள 'தமிழ் பிராமி' கல்வெட்டுகள், மீனாட்சிபுரம் கிராமத்தில் உள்ள இருவகை மலைக் குகைகளை அமைச்சர் ராஜ்மோகன் ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்தார்.

பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில் சங்க காலப் பாண்டிய மன்னர்களின் வரலாற்றைப் பறைசாற்றும் ஆதாரமாக மாங்குளம் தமிழ்ப் பிராமி கல்வெட்டுகள் உள்ளன. இந்த தொல்லியல் தளத்தைச் சுற்றுலாப் பயணிகள், ஆய்வாளர்கள் எளிதில் கண்டு அறியும் வகையில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும். இதைத் தவிர, வழிகாட்டிப் பலகைகளை எண்ம முறையில் அமைக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும், தமிழகத்தில் உள்ள தொல்லியல் சின்னங்களை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

இந்த ஆய்வின் போது தொல்லியல் துறையின் இணை இயக்குநர் வி.ப. யதீஸ்குமார், சுற்றுலா துறை இயக்குநர் வீ.ப. ஜெயசீலன் உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

மூட்டைக்கு ரூ. 50 லஞ்சம்: பட்டியல் எழுத்தர் பணியிடை நீக்கம்

சிதம்பரம்/ நெய்வேலி, ஜூலை 19: வடலூரை அடுத்த மருவாயில் உள்ள அரசு நேரடி நெல் நெல்கொள்முதல் நிலையத்தில் உணவு மற்றும் குடிமைப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் பி.வெங்கடரமணன் ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்தார். அப்போது, ஒரு நெல் மூட்டைக்கு ரூ. 50 லஞ்சம் பெறப்படுவதாக விவசாயி கூறியதை அடுத்து நேரடி நெல் கொள்முதல் நிலையத்தின் பட்டியல் எழுத்தர் வேல்முருகனை பணியிடை நீக்கம் செய்து அமைச்சர் உத்தரவிட்டார்.

கடலூர் மாவட்டம், சிதம்பரம், கொத்தங்குடித்தோப்பு பகுதியில் உள்ள அரசு நவீன அரிசி ஆலை, நகராட்சி அமுதம் பல்பொருள் அங்காடி, சேத்தியாத்தோப்பு எம்ஆர்கே கூட்டுறவு சர்க்கரை ஆலை வளாகத்தில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக சேமிப்புக் கிடங்கு ஆகியவற்றை அமைச்சர் பி.வெங்கடரமணன் ஞாயிற்றுக்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதையடுத்து வடலூரை அடுத்த மருவாயில் உள்ள அரசு நேரடி நெல் நெல்கொள்முதல் நிலையத்தில் அமைச்சர் பி.வெங்கடரமணன் ஆய்வு செய்தார். அப்போது, அங்கு விற்பனைக்காக நெல் மூட்டைகளை கொண்டுவந்திருந்த விவசாயிகளின் பட்டியலைப் பார்வையிட்டு, அதிலிருந்த ஒரு விவசாயியின் கைப்பேசி எண்ணுக்கு தொடர்பு கொண்டு பேசினார்.

அந்த விவசாயியிடம் நெல் கொள்முதல் செய்ய லஞ்சம் பெறப்படுகிறதா எனக் கேட்டார். அதற்கு, அந்த விவசாயி நெல் மூட்டை ஒன்றுக்கு ரூ.50 லஞ்சம் பெறப்படுவதாகத் தெரிவித்தார். இந்த உரையாடலை அமைச்சர் தனது கைப்பேசி ஒலிபெருக்கியில் அனைவரும் கேட்கும்படி செய்தார். இதையடுத்து, நேரடி நெல் கொள்முதல் நிலையத்தின் பட்டியல் எழுத்தர் வேல்முருகனை பணியிடை நீக்கம் செய்து, அவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி ஆட்சியர் சிபி ஆதித்யா செந்தில்குமாருக்கு அமைச்சர் பி.வெங்கடரமணன் உத்தரவிட்டார்.

மேலும், விவசாயிகளிடமிருந்து யார் லஞ்சம் பெற்றாலும், பணியிடை நீக்க நடவடிக்கை தொடரும் என அமைச்சர் எச்சரித்தார்.

குன்றத்தூர் அருகே ரௌடி போலீஸாரால் சுட்டுப் பிடிப்பு

காஞ்சிபுரம், ஜூலை 19: குன்றத்தூர் அருகே பல்வேறு குற்ற வழக்குகளில் தொடர்புடைய ரௌடியை ஞாயிற்றுக்கிழமை போலீஸார் காலில் சுட்டுப் பிடித்தனர்.

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் அருகே திருமுடிவாக்கம் பகுதியில் உள்ள காலி இடத்தில் கருப்பு என்ற தமிழ் அழகு (27) என்ற இளைஞரும், அவரது நண்பரான சூரியா (25) என்பவரும் இணைந்து நாட்டு வெடிகுண்டு தயாரித்துக் கொண்டிருப்பதாக திருமுடிவாக்கம் காவல் துறையினருக்கு தகவல் கிடைத்தது.

தகவலின் பேரில் போலீஸார் அங்கு சென்று அவர்களைப் பிடிக்க முயன்றபோது கருப்பு என்ற தமிழ்அழகு, தான் வைத்திருந்த கத்தியால் காவலர் விஜயகுமாரை குத்தி விட்டு தப்பி ஓட முயன்றார். உடனே சார்பு ஆய்வாளர் மணிகண்டன் அவரை வலது காலில் துப்பாக்கியால் சுட்டு ஓடவிடாமல் தடுத்து மடக்கிப் பிடித்தார்.

இச்சம்பவத்தின் போது தப்பி ஓட முயன்ற கருப்புவின் நண்பரான சூரியாவையும் போலீஸார் கைது செய்தனர். இதனைத் தொடர்ந்து காலில் காயமடைந்த கருப்புவை காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் சேர்த்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக திருமுடிவாக்கம் போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். விசாரணையில், முன்விரோதம் காரணமாக ஓட்டேரி சிலம்பு என்பவரை கொலை செய்ய சதித் திட்டம் தீட்டி அதனடிப்படையில் அவர்கள் நாட்டு வெடிகுண்டு தயாரித்ததாக காவல் துறையினர் தெரிவித்தனர்.

அம்பிகா காட்டன் மில்ஸ் லிமிடெட்

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: எண். 15/9A, வள்ளுவர் தெரு. சிவானந்தா காலனி, கோயம்புத்தூர் - 641 012.

CIN : L17115TZ1988PLC002269

Phone : 0422-2491504/05

email: ambika@acmills.in, website: www.acmills.in

அறிவிப்பு

(நிறுவனத்தின் ஈக்விட்டி பங்குதாரர்களின் கவனத்திற்கு)

முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (Investor Education and Protection Fund Authority IEPF) தொடர்பான அறிவிப்பு

இந்நிறுவன அலுவல்கள் அமைச்சகத்தால் 07 செப்டம்பர் 2016 முதல் அமலுக்கு வந்த முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கியல், தணிக்கை, மாற்றம் மற்றும் பணத்தைத் திருப்பிச் செலுத்துதல்) விதிகள், 2016 மற்றும் அதில் அவ்வப்போது செய்யப்பட்டுள்ள திருத்தங்களின் (இனி "விதிகள்" என குறிப்பிடப்படும்) படி இவ்வறிவிப்பு வெளியிடப்படுகிறது.

மேற்கண்ட விதிகளின்படி, தொடர்ந்து ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் கோரப்படாமலோ, வழங்கப்படாமலோ உள்ள ஈவுத்தொகை (Dividend) தொடர்பான அனைத்து பங்குகளும் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையத்தின் (IEPF Authority) பெயருக்கு மாற்றப்பட வேண்டும்.

மேற்கண்ட விதிகளின்படி, 2026-2027 நிதியாண்டில் IEPF ஆணையத்திற்கு மாற்றப்பட வேண்டிய பங்குகளை வைத்திருக்கும் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு நிறுவனம் 17.07.2026 அன்று தனிப்பட்ட கடிதம் மூலம் தகவல் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து ஏழு ஆண்டுகளாக கோரப்படாமல் உள்ள ஈவுத்தொகை மற்றும் IEPF ஆணையத்திற்கு மாற்றப்பட வேண்டிய பங்குகளின் விவரங்களை நிறுவனம் தனது இணையதளமான www.acmills.in-இல் பதிவேற்றியுள்ளது. சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் தங்களது விவரங்களை சரிபார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

IEPF ஆணையத்திற்கு மாற்றப்படும் கோரப்படாத ஈவுத்தொகையும், அதனுடன் தொடர்புடைய பங்குகளும் மற்றும் அவற்றின் மூலம் கிடைக்கும் அனைத்து சலுகைகளும், விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி பின்னர் IEPF ஆணையத்திடமிருந்து மீண்டும் பெற்றுக்கொள்ளலாம் என்பதை பங்குதாரர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

காகித வடிவில் (Physical Form) பங்குகளை வைத்திருக்கும் மற்றும் IEPF ஆணையத்திற்கு மாற்றப்பட வேண்டிய பங்குதாரர்கள், விதிகளின்படி பங்குகளை மின்னணு வடிவத்திற்கு (Dematerialisation) மாற்றி IEPF ஆணையத்திற்கு மாற்றுவதற்காக, தாங்கள் வைத்திருக்கும் அசல் பங்குச் சான்றிதழ்களுக்குப் பதிலாக நிறுவனம் நகல் பங்குச் சான்றிதழ்களை வழங்கும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். நகல் பங்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டவுடன், அவர்களது பெயரில் பதிவுசெய்யப்பட்டுள்ள அசல் பங்குச் சான்றிதழ்கள் தானாகவே ரத்து செய்யப்பட்டதாகவும், அவை இனி பரிவர்த்தனைக்கு செல்லுபடியாகாதவையாகவும் கருதப்படும்.

டீமேட் (Demat) வடிவில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்களின் பங்குகள், சம்பந்தப்பட்ட டெப்பாசிட்டரிகளான NSDL / CDSL மூலம் கார்ப்பரேட் நடவடிக்கை (Corporate Action) வாயிலாக IEPF ஆணையத்திற்கு மாற்றப்படும்.

மேலும், IEPF விதிகளின்படி பங்குகளை மாற்றும் நோக்கில் நகல் பங்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுவது தொடர்பாக, நிறுவனத்தின் இணையதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ள விவரங்களே போதுமான அறிவிப்பாகக் கருதப்படும் என்பதை பங்குதாரர்கள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

20 அக்டோபர் 2026-க்குள் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களிடமிருந்து நிறுவனம் எந்தவித தகவலையும் பெறாத பட்சத்தில், விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையின்படி, கோரப்படாத ஈவுத்தொகை மற்றும் அதனுடன் தொடர்புடைய பங்குகளை IEPF ஆணையத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை நிறுவனம் மேற்கொள்ளும்.

இது தொடர்பாக ஏதேனும் சந்தேகங்கள் அல்லது விளக்கங்கள் தேவைப்பட்டால், நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்ற முகவரான M/s. MUFG Intime India Private Limited (முன்னர் Link Intime India Private Limited), Surya 35, Mayflower Avenue, Behind Senthil Nagar, Sowripalayam Road, Coimbatore 641028, தொலைபேசி: 0422-4958995 / 2539835 / 2539836, மின்னஞ்சல்: iepf.shares@in.mpms.mufg.com என்ற முகவரியில் தொடர்புகொள்ளலாம்.

மேலும், SEBI-யின் 18 நவம்பர் 2025-ஆம் தேதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின்படி, உங்கள் ஃபோலியோ / டீமேட் கணக்கில் முழுமையான மற்றும் செல்லுபடியாகும் வங்கி விவரங்கள் பதிவு செய்யப்படவில்லை என்றால், நிறுவனம் எதிர்காலத்தில் அறிவிக்கும் ஈவுத்தொகை (Dividend), இருப்பின், வங்கி விவரங்கள் பதிவு செய்யப்படும் வரை வழங்கப்படாமல் நிலுவையில் வைக்கப்படும். எனவே, தங்களது வங்கி விவரங்களை உடனடியாக புதுப்பித்து பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இடம் : கோயம்புத்தூர்
தேதி : 18.07.2026

அம்பிகா காட்டன் மில்ஸ் லிமிடெட்
பி.எஸ். சந்திரன்
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்
DIN: 00628479

விக்ஸித் பாரத் உங்களிடமிருந்து தொடங்குகிறது, உங்கள் வருமான வரி அறிக்கையை (ITR) உரிய நேரத்தில் சமர்ப்பிக்கவும்.

கடைசித் தேதி

தனிநபர் & ஹிந்து கூட்டுக் குடும்பம் (HUF) ITR-1* அல்லது ITR 2* தாக்கல் செய்ய

31 ஜூலை 2026

e-filing easy filing

மதிப்பீட்டு ஆண்டு: 2026-2027 | நிதியாண்டு: 2025-2026

குறிப்பு: 2026-27 மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரி அறிக்கையானது (ITR), 1961 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்படும்.

முக்கிய அறிவிப்பு

- உங்கள் வருமான வரி அறிக்கையை (ITR) (eportal.incometax.gov.in) இணையதளத்தில் e-தாக்கல் செய்யுங்கள்.
- உங்களுக்கு வெளிநாட்டு வங்கிக் கணக்கு, சொத்து அல்லது வருமானம் இருந்தால், வருமான வரி அறிக்கை 2 (ITR 2) மற்றும் FA/FSI அட்டவணையைத் தாக்கல் செய்வது கட்டாயமாகும்.

வருமான வரி அறிக்கையை (ITR) உரிய நேரத்தில் தாக்கல் செய்வதன் நன்மைகள்

- உங்கள் வருமான வரி அறிக்கையை (ITR) உரிய நேரத்தில் தாக்கல் செய்வதன் மூலம் தாமதக் கட்டணங்களையும் வட்டியையும் தவிர்க்கலாம்.
- ITR-ஐ திருத்தலாம்

விரைவாகப் பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு

- உங்கள் வருமான வரி அறிக்கையைத் (ITR) தாக்கல் செய்வதற்கு முன், உங்கள் AIS/TIS/26AS-ஐ சரிபார்க்க வேண்டும்.
- சரியான TDS-ஐ கோரவும்
- தவறான கழித்தல்கள் அல்லது விலக்குகளைக் கோர வேண்டாம்.
- உங்கள் வருமானம் குறித்த துல்லியமான விவரங்களை வழங்கவும்

வருமான வரித் துறையானது e-தாக்கல் இணையதளத்தில் பதிவுசெய்யப்பட்ட தொடர்பு விவரங்கள் மூலமாகவே தொடர்புகொள்வதால், வரி செலுத்துவோர் e-தாக்கல் இணையதளத்தில் வழங்கியுள்ள தங்களது கைபேசி எண், முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் வங்கி விவரங்கள் சரியானவை மற்றும் புதுப்பிக்கப்பட்டவை என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

CBC 15401/13/0003/2627

*வருமான வரி அறிக்கை (ITR) -1: குடியுரிமை பெற்றவராக (சாதாரணமாகக் குடியுரிமை பெற்றவர் தவிர) ரூ.50 லட்சம் வரையிலான மொத்த வருமானம், சம்பளம், இரண்டு வீட்டுச் சொத்துக்கள், பிற மூலங்களிலிருந்து (வட்டி போன்றவை) வருமானம், பிரிவு 112அ-இன் கீழ் ரூ.1.25 லட்சம் வரையிலான நீண்ட கால மூலதன ஆதாயங்கள் மற்றும் ரூ.5 ஆயிரம் வரையிலான விவசாய வருமானம் ஆகியவற்றைக் கொண்ட தனிநபர்களுக்கானது.

*வருமான வரி அறிக்கை (ITR) -2: தொழில் அல்லது பணியின் இலாபங்கள் மற்றும் ஆதாயங்களிலிருந்து வருமானம் இல்லாத தனிநபர்கள் மற்றும் ஹிந்து கூட்டுக் குடும்பங்களுக்கானது (HUF).

மேலும் தகவல்களுக்கும் உதவிக்கும், வருமான வரித் துறையின் Kar Saathi Chatbot -ஐ பார்வையிடவும்.
இணையதளம்: www.incometaxindia.gov.in

வருமான வரித்துறை இந்திய அரசு

மேலும் தகவலுக்கு, தயவுசெய்து பின்வரும் இணையதளத்தைப் பார்வையிடவும். www.incometaxindia.gov.in

மேலும் தகவலுக்கு QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

e-தாக்கல் கைதொலைத்திரைக் கான QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும். இணையதளம்: eportal.incometax.gov.in/iec/foservices/#/login

@incometaxindiaofficial @IncomeTaxIndia @incometaxindiaofficial @incometaxindia.official @incometaxindiaofficial